பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
13.08.2025 7 15
புதன்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. உஸ்பெகிஸ்தானுடனான நல்லுறவை மேலும் வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. புதிய வருமான வரிச் சட்டம் வரி செலுத்துவோருக்கு வசதிகளை அதிகரிக்கும் என்று மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

4. கடல்சார் துறையில் இந்தியா - சிங்கப்பூர் இடையேயான ஒத்துழைப்பு வலுப்படுத்தப்படும் என்று மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

5. தேசிய ஜூனியர் மகளிர் ஹாக்கி போட்டியில் ஜார்க்கண்ட் அணி பட்டம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

ஸ்பெகிஸ்தானுடனான நல்லுறவை மேலும் வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

உஸ்பெகிஸ்தான் அதிபர் திரு. ஷௌகத் மிர்ச்சியோயேவ் பிரதமரை நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

வர்த்தகம், போக்குவரத்து, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை மேற்கொண்டனர்.

உலகளாவிய விவகாரங்கள் குறித்தும் அவர்கள் கருத்துகளை பகிர்ந்துகொண்டனர்.

இதன்மூலம் இருநாடுகளுக்கிடையேயான நல்லுறவு அதிகரிக்கும் என்று திரு. நரேந்திர மோடி சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

செமிகண்டக்டர் உற்பத்தித் துறையில் இந்தியா விரைவான முன்னேற்றத்தை அடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

*இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், புதிதாக 4 ஆலைகளை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பது, இதன் உற்பத்தி திறனை அதிகரிப்பதுடன் ஏராளமான புதிய வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும் மஎன குறிப்பிட்டுள்ளார்.*

*அருணாச்சல பிரதேசகத்தில் புதிய நீர் மின்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பது அந்த மாநில வளர்ச்சியை துரிதப்படுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*லக்னோ மெட்ரோ ரயில் கட்டமைப்பை விரிவுபடுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பது லக்னோ நகர மக்களின் போக்குவரத்தை எளிமைப்படுத்தும் என அவர் தெரிவித்துள்ளார்.*

*நாடு முழுவதும் போக்குவரத்து உள்கட்டமைப்பை வலுப்படுத்த மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*இதனிடையே இந்த திட்டங்களுக்காக ஆந்திர முதலமைச்சர் திரு சந்திர பாபு நாயுடு, ஒடிசா முதலமைச்சர் திரு மோகன் சரண் மஜி, உத்தரப் பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத், அருணாச்சல பிரதேச முதலமைச்சர் திரு பெமா காண்டு ஆகியோர் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.*

*<<<<>>>>*

*புதிய வருமான வரிச் சட்டம் வரி செலுத்துவோருக்கு வசதிகளை அதிகரிக்கும் என்று மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.*

*புதிய வருமான வரி மசோதா மக்களவையைத் தொடர்ந்து மாநிலங்களவையிலும் நேற்று நிறைவேற்றப்பட்டது.*

*இதன் மீதான விவாதங்களுக்கு பதிலளித்துப் பேசிய திருமதி நிர்மலா சீதாராமன், 1961ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம் தற்போதைய சூழலுக்கு ஏற்றதாக இல்லை என்பதால் புதிய மசோதா நிறைவேற்றப்படுவதாக கூறினார்.*

*பட்ஜெட்டில் அரசு வாக்குறுதி அளித்தபடி வரிகள் தொடர்பான விதிமுறைகள் எளிமைப்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.*

*16 மணி நேரம் நடைபெற்ற இந்த விவாத்தில் எதிர்க்கட்சிகள் பங்கேற்காதது அதிருப்தியளிப்பதாக திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.*

<<<<>>>>

*விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.*

*தில்லியில் நடைபெற்ற விவசாயிகள் சந்திப்புக் கூட்டத்தில் பேசிய அவர், வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணியாமல் விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கில் பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக கூறினார்.*

*மத்திய அரசின் நடவடிக்கைகள் வேளாண் துறையையும், கிராமப்புற பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதாக திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறினார்.*

*விவசாயிகளின் நலனை மையமாகக் கொண்ட அரசின் கொள்கைகளுக்கு இக்கூட்டத்தில் பங்கேற்ற விவசாய சங்க பிரதிநிதிகள் பாராட்டு தெரிவித்ததுடன், பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்தனர்.*

<<<<>>>>

*நாட்டின் மஞ்சள் ஏற்றுமதி 50 புள்ளி 7 சதவீதம் உயர்ந்துள்ளதாக மத்திய வர்த்தகத்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.*

*மக்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த அவர், உலக மஞ்சள் சந்தையில் இந்தியாவின் பங்கு 66 சதவீதமாக அதிகரித்துள்ளது என்றார்.*

*மஞ்சள் ஏற்றுமதி 2024-25-ம் நிதியாண்டில் 341 புள்ளி 54 மில்லியன் டாலராக இருந்தது எனவும் முந்தைய நிதியாண்டில் இது 226 புள்ளி 58 மில்லியன் டாலராக இருந்தது எனவும் திரு. ஜிதின் பிரசாதா குறிப்பிட்டார்.*

<<<<>>>>

*இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் நாடுமுழுவதும் நடைபெற்று வருகிறது.*

*இதனையொட்டி, பல்வேறு இடங்களில் தேசியக்கொடி பேரணிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.*

*திரிபுராவில் முதலமைச்சர் திரு. மாணிக் சாகா தலைமையில் தேசியக் கொடி பேரணி நடைபெற்றது.*

மணிப்பூரில் ஆளுநர் திரு. அஜய்குமார் பல்லா தலைமையில் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் பேரணியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

சிக்கிமில் தேசியக் கொடி பேரணியை முதலமைச்சர் திரு. பிரேம்சிங் தமாங் தொடங்கி வைத்தார்.

தமிழகத்தின் நாகப்பட்டினத்தில் தேசிய மாணவர் படை சார்பில் பேரணி நடைபெற்றது.

இது தேசப்பற்றை அதிகரிக்கும் என இதில் பங்கேற்ற மாணவிகள் தெரிவித்தனர்.

(Voice Byte - 50 Sec)

<<<<>>>>

கடல்சார் துறையில் இந்தியா - சிங்கப்பூர் இடையேயான ஒத்துழைப்பு வலுப்படுத்தப்படும் என்று மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

கடல்சார் துறையில் இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து மும்பையில் நேற்று நடைபெற்ற மாநாட்டில் காணொலிக் காட்சி மூலம் அவர் உரையாற்றினார்.

இந்தியா - சிங்கப்பூர் இடையேயான பசுமை மற்றும் டிஜிட்டல் கடல்சார் வழித்தடம் இத்துறையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அவர் கூறினார்.

இவை வர்த்தக வழித்தடங்களாக மட்டுமல்லாமல் உலகளாவிய வணிக சூழலில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும் என்று இந்த மாநாட்டில் பங்கேற்ற சிங்கப்பூர் துணைப் பிரதமர் திரு. Gon Kim Yong தெரிவித்தார்.

இதனிடையே இந்தியா - சிங்கப்பூர் இடையேயான அமைச்சர்கள் நிலையிலான 3வது வட்டமேஜைக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

இதில் இந்தியா சார்பில் மத்திய அமைச்சர்கள் திரு. ஜெய்சங்கர், திருமதி நிர்மலா சீதாராமன், திரு. பியூஷ் கோயல், திரு. அஷ்வினி வைஷ்ணவ் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

மகாராஷ்டிராவில் புதிதாக 15 ஆயிரம் காவலர்களை பணியில் சேர்க்க அந்த மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

முதலமைச்சர் திரு தேவேந்திர ஃபட்னவிஸ் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 3 ஆண்டுகளில் 38 ஆயிரம் காவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் தற்போது மேலும் புதிதாக காவலர்கள் பணியமர்த்தப்படுவதன் மூலம் மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு திறம்பட பராமரிக்கப்படும் என்றும் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ராஜஸ்தானில் சுரங்க மற்றும் சுற்றுலா துறைகளின் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதாக அந்த மாநில முதலமைச்சர் திரு. பஜன்லால் சர்மா கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற ராஜஸ்தான் உலக முதலீட்டாளர் உச்சிமாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செயல்படுத்துவது குறித்த ஆலோனைக் கூட்டம் ஜெய்ப்பூரில் நடைபெற்றது.

நில ஒதுக்கீடு உட்பட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொடர்பான அனைத்து பணிகளையும் விரைவுபடுத்துமாறு அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

சுரங்கம் மற்றும் சுற்றுலா துறைகளில் புதிய வாய்ப்புகளை ஆராய வேண்டும் என்றும் திரு. பஜன்லால் சர்மா கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

பீகாரில் செயல்படுத்தப்படும் இலவச மின்சாரத் திட்டத்தால் ஒரு கோடியே 89 லட்சம் மின் நுகர்வோர் பயன் அடைவதாக அந்த மாநில முதலமைச்சர் திரு. நிதிஷ் குமார் கூறியுள்ளார்.

இத்திட்டத்தின் பயனாளிகளுடன் நேற்று அவர் காணொலி மூலம் கலந்துரையாடினார்.

125 யூனிட் வரையிலான மின்சார பயன்பாட்டுக்கு கட்டண விலக்கு அளிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

பிரதமரின் சூரிய மின் சக்தி வீடுகள் திட்டத்தையும் மாநில அரசு ஊக்குவித்து வருவதாக திரு நிதிஷ் குமார் கூறினார்.

<<<<>>>>

தெலங்கானாவின் சில இடங்களில் இன்று அதிகனமழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஹன்மகொண்டா, ஜங்காவ்ன், மஹபூபாபாத், வாரங்கல், யாதாத்ரி புவனகிரி, மேடக், சங்கரெட்டி மற்றும் விகாராபாத் மாவட்டங்களுக்கு இன்றும் நாளையும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உத்தராகண்ட், இமாச்சலப் பிரதேசம், பீகார், சத்தீஸ்கர், மேற்கு வங்கம், ஒடிசா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் சில இடங்களில் இன்று கனமழை முதல் மிக கனமழை பெய்யும் என அந்த மையம் தெரிவித்துள்ளது.

தில்லி, பஞ்சாப் மற்றும் ஹரியானாவில் சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் நாட்டின் வடகிழக்குப் பகுதிகளில் பல இடங்களில் மிதமான மழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தெலங்கானாவில் அதிகனமழை எச்சரிக்கையை அடுத்து அத்தியாவசியப் பணிகளில் உள்ள அரசு ஊழியர்களின் விடுமுறையை மாநில அரசு ரத்து செய்துள்ளது.

தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும், வாகனப் போக்குவரத்தைத் தவிர்க்குமாறும் அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் காணொலி மூலம் முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி ஆலோசனை மேற்கொண்டார்.

இமாச்சலப் பிரதேசத்தில் தொடர் மழையால் நிலச்சரிவுகள் ஏற்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தேசிய ஜூனியர் மகளிர் ஹாக்கி போட்டியில் ஜார்க்கண்ட் அணி பட்டம் வென்றது.

காக்கிநாடாவில் நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் அந்த அணி ஹரியானா அணியை 2-1 என்ற கோல் கணக்கில் வென்று, தொடர்ந்து இரண்டாவது முறையாக சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

--------------

தேசிய ஆடவர் ஜூனியர் ஆடவர் ஹாக்கி போட்டி ஜலந்தரில் நேற்று தொடங்கியது.

முதல் நாள் ஆட்டங்களில் கேரளா - திரிபுராவையும், ராஜஸ்தான் குஜராத்தையும் வென்றன.

இதேபோல் அருணாச்சலப்பிரதேச அணி - ஹிமாச்சலப்பிரதேச அணியையும், தில்லி அணி - அசாம் அணியையும் வென்றன.

<<<<The End>>>>